# கர்நாடக இசை கற்பித்தலில் மாற்றீடு செய்யக்கூடிய திறன்களின் முக்கியத்துவம்

[1]ஸ்ரீ.தர்ஷனன்,[2]கு.சிவானுஜா
[1,2] யாழப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வு சுருக்கம்**

இவ் ஆய்வானது கர்நாடக இசை கற்றவர்களுக்குத் தற்காலத்தில் வேலை வாய்ப்பைக் கொடுக்க பொதுவாகவே தொழில் வழங்கும் நிறுவனங்கள் பின்னடிப்பதற்கான காரணங்களைக் கண்டறிவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப் படுகின்றது.விபரக்கொத்து மூலம் நேரடிக் கலந்துரையாடல் மற்றும் குழுக் கலந்துரையாடல் முறை ஆகியன இவ் ஆய்வில் பயன்படுத்தப் படுகின்றன. வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்கள் இசைப் பட்டப்படிப்பு பாடநெறியிலும் இசையாளர்கள் பாடநெறிக்கு ஊடாக வளர்த்துக் கொள்ளும் திறன்களிலுமே தங்கியுள்ளது. தொழில் வழங்கும் நிறுவனங்கள் எதிபார்க்கும் திறன்களைக் கண்டறிந்து பாடநெறிக்குள் புகுத்துவதனூடாக தொழில் வழங்கும் நிறுவனங்களது எதிர்பார்ப்பை இசைப் பட்டப் படிப்பின் ஊடாகப் பட்டதாரிகளுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும்.

**பிரதான சொற்கள்**: கர்நாடக இசை, இசைப் பட்டப்படிப்பு, இசையாளர்கள், பட்டதாரி, திறன்

## ஆய்வு அறிமுகம்

சமூகத்திற்கு ஒரு சிறந்த கல்வியியலாளனை உருவாக்கிக் கொடுக்கும் பங்கு பல்கலைக் கழகங்களுக்கே உண்டு. பல்கலைக்கழகங்களின் பட்டப் படிப்புக்கள் பொதுவாகவே தொழில்களை மையப்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றன. படித்து முடித்து விட்டுச் செய்யப்போகும் தொழில்களுக்கு முன்னாயத்தமாகவே கற்றல்கள் இருத்தல் வேண்டும். உலகில் அதிகம் வேலை வாய்ப்பைத் தரக்கூடிய நிறுவனங்கள் அதிகம் எதிர்பார்க்கும் திறன்களைப் பல்கலைக்கழகக் கற்றலினூடாகக் கொடுப்பதன் மூலம் உலகின் வேலையின்மைப் பிரச்சனையை வெகுவாகக் குறைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

## ஆய்வின் நோக்கம்

பல்கலைக்கழகங்களுக்கு ஊடாக பல்வேறு பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் என்று தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன. தற்காலத்தில் வேலை வாய்ப்பை எதிர் நோக்கியதாகக் காணப்படும் தொழில்மையக் கல்வியையே வேலை வாய்ப்பை வழங்கக்கூடிய நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. இதன் காரணமாகப் பல வேலை அற்ற பட்டதாரிகள் உருவாகும் நிலை சமீப காலமாக உருவாகி வருகின்றது. இந்நிலை தொடருமானால் பாரிய இடர்ப்பாடுகள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகும். கர்நாடக இசையானது பல்கலைக் கழகங்களில் பிரதான

பாடநெறியாகக் கற்பிக்கப்படுகின்ற போதும் இசைப் பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்குப் பல நிறுவனங்கள்தயங்குவதற்கான காரணத்தைக் கண்டறிவதும் அதற்கான தீர்வுகளை முன்வைப்பதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

## கருதுகோள்

கர்நாடக இசைப் பாடங்களுக்கூடாக கர்நாடக இசைக்குரிய திறன்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன.

## ஆய்வுப் பிரச்சனை

கர்நாடக இசை கற்று வெளியேறிய பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நிறுவனங்கள் குறைவாகவே உள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது வினாக் கொத்துக்கள் மூலமாக தனிக் கலந்துரையாடல் மூலமும், குழுக் கலந்துரையாடல் மூலமும் பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப் படுகிறது.

## விவரிப்பு

இவ் ஆய்வானது பல்கலைக் கழகத்தில் கர்நாடக இசையைக் கற்றவர்கள் வேலை செய்யும் இடங்கள் கண்டறியப்பட்டு, அங்கு அவர்களின் தலைமை அதிகாரிகளிடமும் மற்றும் இசைப் பட்டப்படிப்பை நிறைவு செய்து வேலை செய்யும் பட்டதாரிகளிடமும் மேற்கொள்ளப்பட்டதாகும்.இவ் ஆய்விற்கான தகவல்கள் பாடசாலை அதிபர்கள், பிரதேசச் செயலாளர்கள், வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பாடசாலை இசை ஆசிரியர்கள், கிராமசேவக உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றவர்களிடம் இருந்து பெறப்பட்டன.

ஆரம்ப காலத்தில் இசையானது குருகுலமாகவே கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கையில் 1960 களின் பின்னரே நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்வியாக இசை கற்பிக்கப்பட்டது. ஏனைய பாடங்களின் குருகுல முறையானது கலைகளுக்கு இருந்த குருகுல முறையைப் போல முக்கியத்துவம் பெறவில்லை. இதன் காரணமாக மக்கள் மத்தியில் இசைப் பட்டப்படிப்பு எனும்போது அதைச் சமூகத்திற்குப் பயனளிக்கக் கூடியதாகப் பலர் கருதுவதில்லை.

வங்கிகளில் வேலை வாய்ப்பிற்கு ஆட்சேர்ப்பின் போது கலைப்பிரிவில் வேறு பாடங்கள் கற்றவர்கள் உள்வாங்கப்பட்டாலும் இசை, நடனக்கலை கற்ற மாணவர்கள் உள்வாங்கப்படுவதில்லை. இதற்குரிய காரணம் வங்கி முகாமையாளர்களிடம் கேட்கப்பட்டது. அவர்களது கருத்துப்படி இசையாளன் தன் கற்றலினூடாக கணக்கு வழக்குத் திறன், வாடிக்கையாளருடன் தொடர்பாடல் திறன், நேர முகாமைத்துவத் திறன் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கருதுகின்றார்கள். இசையாளன் என்றால் வெறுமனே இசைக் கச்சேரி வைக்கவும், பாடசாலையில் இசை கற்பிக்கவும் மட்டும் தான் என்ற எண்ணம் இல்லாத வகையில் பாடத்திட்டத்தில் மாற்றங்களைப் புகுத்துவதன் மூலம் சிறந்த வெளியீட்டைச் சமூகத்திற்குக் கொடுக்கமுடியும் எனக் கூறினார்கள் (வர்த்தக வங்கி முகாமையாளர், இலங்கை வங்கி முகாமையாளர்,2014).

இசை கற்ற பட்டதாரிகள் பிரதேசச் செயலகத்தில் பிரதேசச் செயலாளரின் கீழ் பணியாற்றுகின்றனர். பிரதேசச் செயலாளர்களின் கருத்துப்படி நிதி நிலை சம்பந்தமான திறன்கள், கணனியில் வேலை செய்யக்கூடிய ஆரம்பக் கற்கை நெறிகள் முதலியவற்றினைப் பாவித்து வேலைகளைச் செய்யக்கூடிய திறன், தமிழ், ஆங்கிலம்,சிங்களம் முதலிய மும்மொழித் தேர்ச்சி என்பவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இதனோடு நிர்வாக முகாமைத்துவம் தொடர்பான ஆற்றல்களையும் பெற்றிருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றனர் (பிரதேச செயலாளர், 2014).

இசைப்பட்டதாரிகளுக்குச் ஆரம்ப காலத்தில் ஆசிரியத் தொழிலே வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் சமீப காலத்தில் தேவைக்கும் அதிகமான இசை ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டதன் விளைவாக பிரதேச செயலகங்களுக்குள் கிராம உத்தியோகத்தர்களுக்குக் கீழும் பயிற்சிக்காக 1 வருடம் தற்காலிகமாகப் பணியாற்றுகின்ற நிலை இசைப் பட்டதாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இசைப் பட்டதாரிகள் வேலை செய்த கிராம அலுவலர்களது கருத்துப்படி தமிழ், ஆங்கில மொழிகளில் தட்டச்சு செய்யும் திறனும், மக்களின் பிரச்சனைகளை விளங்கிக் கொண்டு அதற்குரிய முறையில் சமூக சேவை செய்யும் ஆற்றலும் தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளை விளங்கிக் கொள்ளும் தன்மையும் அதிகமாக அவர்களிடம் எதிர்பார்ப்பதாகவும், ஆனால் அத்தகைய ஆற்றல்களை முழுமையாக அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர் (கிராம உத்தியோகத்தர்கள் 2014).

இசைப் பட்டதாரிகள் சமுர்த்தி உத்தியோகத்தராகவும்,அபிவிருத்தி உத்தியோகத்தராகவும், கலாசார உத்தியோகத்தராகவும், நிதி மற்றும் திட்டமிடல் உத்தியோகத்தராகவும் பிரதேசச் செயலகங்களில் வேலை செய்கின்றனர். இவர்களது கருத்துப்படி ஏனையவர்கள் தங்களை மதிப்பதில்லை எனவும், சங்கீதத்தைக் கற்றுவிட்டு என்ன வேலையை இவர்கள் செய்வார்கள் எனவும் ஏனையோரால் மட்டமான நிலைக்கு உட்படுத்தும் தன்மைகள் வேலைத்தளத்தில் காணப்படுவதாகவும் கூறுகின்றனர். எனினும் இவர்களுக்குக் கணணியில் கடிதங்கள் வரைதல், மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக மக்களிடம் கருத்துக்களைப் பெற்று செயற்திட்டங்கள் செய்யும் வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன. கலாசார உத்தியோகத்தர்களிடம் கலை, கலாசார நிகழ்வுகளை ஒழுங்கு செய்து முன்னின்று நடாத்தும் பணிகள் ஒப்படைக்கப் படுகின்றன.இதனைவிட அவர்களது பதவிக்குத் தகுந்தவகையில் வேலைகள் கொடுக்கப்படாமல் மேலதிகாரிகளினால் தட்டிக் கழிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகக் கூறுகின்றார்கள் (கர்நாடக இசைப் பட்டதாரிகள், 2014).கர்நாடக இசை கற்று வெளியேறிய பட்டதாரிகள் பலர் பாடசாலையில் இசை ஆசிரியர்களாக நியமனம் பெற்றுச் செல்கின்றனர். சில பாடசாலைகளில் இரண்டு அல்லது மூன்று இசை ஆசிரியர்கள் கூடக் காணப் படுகின்றனர். இவ்வாறான பாடசாலைகளில் சங்கீதத்தோடு வேறு பாடங்களும் கற்பிக்கப் பணிக்கப்படுகின்றனர். இதைவிடக் கணணி ஆசிரியர்களாகவும் பாடசாலையின் மேலைத்தேய இசைக் குழுவைப் பயிற்சியளிக்கும் பணிகளிலும் ஈடுபடுத்தப் படுகின்றனர். கர்நாடக இசையில் கீழைத்தேய இசைக்கருவிகள் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. இத்திறனோடு மேலைத்தேய இசைக் கருவிகளின் பயன்பாட்டுக் கற்றலையும்

பாடநெறிக்குள் உட்புகுத்துதல் சிறந்ததாகக் கருதுகின்றனர் (கர்நாடக இசைப்பட்டதாரி, ஆசிரியர்கள் 2014). பாடசாலைகளில் ஆசிரியருக்குரிய பொறுப்புக்கள், கடமைகளை வழங்குவது அப்பாடசாலையின் அதிபர்கள். இவர்களது எதிர்பார்ப்பின் படி, இசை ஆசிரியர் இசையோடு ஏனைய பாடங்களையும் கற்பிக்கும் திறனையும், நிர்வாக, முகாமைத்துவத் திறன்களையும், தனித்தோ அல்லது குழுவாகவோ ஆற்றுகை செய்யக்கூடிய திறனையும், ஆங்கில மொழித் தேர்ச்சியையும் கொண்டிருக்க வேண்டும் (ஞானபொன்ராஜா 2014). சேவை மனப்பாங்கும், அர்ப்பணிப்புடன் செயலாற்றும் தன்மையும், புதிய தொழினுட்ப முறைகளைக் கையாண்டு கற்பிக்கும் திறனையும், சக ஆசிரியர்கள் மற்றும் மாணவரிடத்தில் நல்ல தொடர்பாடலை மேற்கொள்ளக் கூடிய திறனையும் இசைப் பட்டதாரிகளிடம் இருந்து எதிர்பார்க்க வேண்டும் (குகானந்தராஜா 2014).

**முடிவுகள்**

மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி வங்கி, நிதி நிறுவனங்களில் உயர்தரம் கற்று முடித்த தகைமையுடனே வேலைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப் படுகின்றனர். இசை கற்ற பட்டதாரிகள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு வங்கிகளில் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதில்லை. இதற்கு அவர்கள் மத்தியில் இசைப் பட்டப்படிப்பு பற்றிய வேறுபட்ட கண்ணோட்டமே காரணமாக அமைகின்றது. இசையாளனுக்குப் பாட மட்டும்தான் தெரியும் என்ற தப்பான கண்ணோட்டம் சமூகத்தில் எல்லோரது பார்வையிலும் நிலவுகின்றமைதான் வேலை கொடுக்க ஏனைய நிறுவனங்களும் தயங்குவதற்குக் காரணமாக அமைகின்றது. இதற்குக் காரணமாக இசை கற்று வெளியேறிய பட்டதாரிகளும் வெளியிடங்களில் இசையைக் கற்றுவிட்டு வேறு வேலையைச் செய்வதா? என்ற கருத்தை முன் வைக்கின்றனர். இக் கருத்துக்களை மாற்றீடு செய்யக்கூடிய வகையில் ஏனைய திறன்களையும் அவர்களிடத்தில் இசைப் பட்டநெறி கற்கும் காலத்திலேயே பாடநெறிக்கு ஊடாகக் கொடுக்க வேண்டும்.

தொழில் வழங்கும் நிறுவன முகாமையாளர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது, கல்வியினூடாகவே வேறுபட்ட திறன்களை உட்புகுத்திச் சமூகத்தில் எந்த இடத்திலும் வேலையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் பட்டதாரிகளைச் சமூகத்திற்குக் காண்பிப்பதாகும். இதை இசைக் கல்வியினூடாகவும் புகுத்திக் கொள்ள முடியும்.

தொழில்களை வழங்கக் கூடிய பலதரப்பட்ட வழங்குனர்களும் கூறிய அதிகமாக அவர்கள் எதிர்பார்க்கும் திறன்களாக நேர முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், நிதி, திட்டமிடல் திறன்கள், கணனி தொடர்பான ஆரம்ப அறிவுகள், ஆங்கில, சிங்கள மொழிகளில் தேர்ச்சி, வாடிக்கையாளர் தொடர்பாடல் திறன், பொது உளச்சார்பு சம்பந்தமான விடயங்களைக் குறிப்பிட முடியும். இவற்றோடு பட்டக் கற்கை நெறிக் காலத்திலே ஏதாவதொரு இடத்தில் பயிற்சி பெற்றிருத்தலையும் சிறந்த அனுபவமாகக் கருதுகின்றார்கள். இவர்களது கருத்துப்படி இவர்கள் எதிர்பார்க்கும் திறன்கள் அனைத்தையும் இசை கற்கும் மாணவர்களுக்கு கற்கை நெறிக்காலத்துக்குள் திறன்களை வளர்க்கும் குறிப்பிட்ட பாடநெறிக் கூடாகவே கொடுக்க முடியும். பட்டக் கற்கைக் காலத்திலே பாடசாலைகளுக்கோ, நிதி நிறுவனங்களுக்கோ, வங்கிகளுக்கோ, அல்லது வேறு நிறுவனங்களுக்கோ மாணவர்களை அனுப்பி மூன்றோ அல்லது ஆறு மாதகாலப் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் அலுவலக கணக்கு வழக்கு சார்ந்த திறன்கள், தொடர்பாடல் திறன்களை குழுச் செயற்பாட்டுக் கற்பித்தலினூடாகவே வழங்குவதன் மூலம் இனிவரும் காலங்களின் தொழில் வழங்குனர்களின் பார்வைகளில் இசை கற்றவர்களையும் சமமாக எண்ணித் தொழில்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்த முடியும்.

**உசாத்துணை நூல் பட்டியல்**

1. கர்நாடக இசைப் பட்டதாரி இசை ஆசிரியர்கள் (குழுக் கலந்துரையாடல், சித்திரை 21, 2014).

2. கர்நாடக இசைப் பட்டதாரிகள், பிரதேசச் செயலகம், கோப்பாய் (குழுக் கலந்துரையாடல், சித்திரை 16, 2014).

3. கிராம உத்தியோகத்தர்கள், பிரதேசச் செயலகம், கோப்பாய்த் தொகுதி (குழுக் கலந்துரையாடல், சித்திரை 16, 2014).

4. குகானந்தராஜா, அதிபர், கனகபுரம் மஹா வித்தியாலயம், கிளிநொச்சி (தனிக் கலந்துரையாடல், வைகாசி 7, 2014).

5. பிரதேசச் செயலாளர், பிரதேசச் செயலகம், கோப்பாய் (தனி கலந்துரையாடல், சித்திரை 16, 2014).

6. முகாமையாளர், இலங்கை வங்கி, கோப்பாய் கிளை (தனிக் கலந்துரையாடல், சித்திரை 16, 2014).

7. முகாமையாளர், வர்த்தக வங்கி, அச்சுவேலிக் கிளை (தனிக் கலந்துரையாடல், சித்திரை 16, 2014).

8. ஞானபொன்ராஜா, அதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் (தனிக் கலந்துரையாடல், வைகாசி 8, 2014).